**நாமல்ஓயா பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 01 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாமல்ஓயா பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குரிய 16 வாகனங்களின் பெறுமதி ரூபா 31,780,414 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 36,623,794 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் நடைமுறையல்லாத சொத்துக்கள் ரூபா 4,843,380 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி இருப்பின் பெறுமதியானது ரூபா 19,397 ஆன போதிலும், நிதிக்கூற்றக்களில் ரூபா 34,527 ஆக காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 15,130 இனால் அதிகரித்துக் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டினுள் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 372,8151 பெறுமதியான கூட்டெரு நிலையத்தினுள் நிர்மாணிக்கப்பட்ட 04 செயற்திட்டங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிராமையால், நடைமுறை அல்லாத சொத்துக்கள் அந்த பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பொல்வத்த கூட்டெரு நிலையத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்குரிய ரூபா 106,264 தொகையான அபிவிருத்திக் கடன் கொடுத்தோர் கணக்கு வைக்கப்பட்டிராமையால் நடைமுறை பொறுப்புகள் அந்த பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான நிலையான வைப்புக்கள் ரூபா 500,000 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 50,000 என காண்பிக்கப்பட்டமையால், நிலையான வைப்புக்கள் ரூபா 450,000 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான உடன்படிக்கையினை மீதியானது ரூபா 84,439 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 181,390 ஆக காண்பிக்கப்பட்மையால், நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 96,951 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான நானாவித வைப்பு மீதி பட்டோலைக்கமைய ரூபா 447,600 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 653,096 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 205,496 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | பிரதேச சபை விதிக் கோவையின் விதி 59 - 66 | ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் பிரதேசத்தினுள் மதிப்பாய்வொன்றை நடாத்தி தொழிற்சாலை உரி அறவிடப்பட வேண்டிய நிறுவனங்களை இனங்கண்டு அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை 30/2016 | ஓட்ட நிலமையிலுள்ள 06 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,300,493 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,207,167 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 315,000 | 75,550 | 75,550 | - | 20,000 | 7,620 | 7,620 | - |
| (ii) | வாடகை | 2,358,600 | 1,843,205 | 1,829,063 | 50,690 | 1,979,920 | 1,657,802 | 1,652,146 | 36,548 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 256,000 | 287,670 | 293,470 | 22,505 | 453,000 | 346,440 | 346,035 | 28,305 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,101,000 | 1,299,987 | 880,430 | 977,408 | 1,574,000 | 1,555,396 | 1,635,263 | 557,852 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

சபையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 4,129,117 ஆக இருந்ததுடன், ஆண்டினுள் ரூபா 3,078,513 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய வருமானம் சேகரித்தலின் சதவீதமானது 74.55 சதவீதமான மட்டத்தில் நிலவுவதாக அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தொலைபேசி கோபுரமொன்றிற்காக அங்கீகாரம் வழங்குவதற்கு ஆகக்குறைந்தது ரூபா 20,000 படி அறவிடப்பட வேண்டிய போதிலும், சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் காணப்படும் 09 கோபுரங்களுக்காக ரூபா 180,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 454,124 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 469,659 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொருள் மெய்மையாய்வு அறிக்கைக்கமைய சபைக்குச் சொந்தமான ரூபா 5,615 பெறுமதியான 51 வாசிகசாலை புத்தகங்கள் காணாமற் போனமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கொண்டு வரப்படுகின்ற ஊழியர் கடனான அறவிட வேண்டிய ரூபா 39,388 தொகையை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2006 ஆம் இலக்க சுற்றிக்கைக்கமைய 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 63,200 செலவிடப்பட்டு நிறுவப்பட்ட விரலடைய இயந்திரம் செயலிழந்து காணப்பட்டதுடன், அதனை பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் உருக்குலைந்து காணப்படும் கெப் வண்டியொன்றினை கைத்தவிர்ப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மோட்டர் கிரேடர் வாகனம் மற்றும் பவுசர் ட்ரெய்லரின் உரித்தினை உரிய திகதிகளில் கையேற்காமையால், உரித்தினை கையேற்கும் போது ரூபா 4,800 தொகையான தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

சபையின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியில் செயலாளர் மற்றும் நூலகர் உள்ளடங்கலாக 05 பதவிகளுக்காக 06 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிலவியது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டிற்காக 04 தொலைபேசிக் கோபுரங்கள் மூலம் பெறப்பட வேண்டிய அனுமதிப்பத்திர கட்டணங்களான ரூபா 12,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கப்படாமை

சபைக்கு சொந்தமான ரூபா 3,794,700 பெறுமதியான 05 வாகனங்கள் ஓட்ட நிலமையில் இல்லாதிருந்ததுடன், அந்த வாகனங்களை பழுதபார்ப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

சபையினால் பயன்படுத்தப்படும் 52 காணித்துண்டுகளின் உரித்தினை சபையின் பெயருக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான ஓட்ட நிலையிலுள்ள ரூபா 6,300,000 பெறுமதியான புதிய லொறி பவுசர் மீளாய்வாண்டினுள் 94 கிலோ மீட்டர்கள் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

### 3.4.4 வாகனப் பயன்பாடு

சபைக்கு சொந்தமான 19 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், 17 வாகனங்களுக்காக காப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 05 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் | | கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | - | சொத்துக்கள் கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமை. |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | - | பாதீடு உரிய முறையில் தயாரிக்கப்படாமை. |
| (இ) | இருப்பு | - | துரிதமாக சரிபார்க்கக்கூடிய முறையில் இருப்புக்கள் களஞ்சியப்படுத்தப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் ்ட | - | (i) பட்டோலைகள் தயாரிக்கப்படாமை<br>(ii) காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்டாமை |
| (உ) | ஊழியர் முகாமைத்துவம் | - | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை. |
| (ஊ) | செயற்திட்டம் மற்றும் ஒப்பந்தங்கள் | - | போதியளவான மேற்பார்வையொன்று இல்லாதிருந்தமை. |